தென் இந்திய யாத்திரை
ஆவணி முதல் வாரத்தில்
செல்லும் இடங்கள்
திருச்சி, மதுரை, பாரதிமண்டபம்,
பாஞ்சாலங்குறிச்சி, கன்னியாகுமரி,
திருவனந்தபுரம், குற்றாலம், மைசூர்,
பெங்களூர், திருப்பதி, சென்னை, சிதம்
பரம், வேளாங்கண்ணி ஆறுபடை
இன்னும் பல.
ரூபா 875/- மட்டுமே
விபரங்கட்கு:-
சத்தியா றவல்ஸ்
224/A கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 வைகாசி 3 நு ஆசிரி 4 இதழ் 95

யாழ்ப்பாணம் புதன்கிழமை 17-5-78

லாலா சோப்
LALA SOAP
லாலா நீலச் சோப்
எல்லாக் கடைகளிலும்
கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி.

RECEIVED
1978-5-17
PERIODICALS
DIVISION

# விடுதலைப்புலி தடை சட்டமூலம்
# நாளை பேரவைக்கு வருகிறது

## ஜனாதிபதிக்கு புதிய அதிகாரங்கள்; வர்த்தமானிமூலம் தடைசெய்யலாம்

### சின்னம், சீருடை அணிவதும் சட்டவிரோதம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தையும், அதுபோன்ற தீவிரவாத இயக்கங்களையும், மற்றும் சட்ட விரோத வன்செயல் நடவடிக்கைகளில் ஈடுபடும் இயக்கங்களையும் தடைசெய்வதற்கான சட்டமூலம், நாளை வியாழக்கிழமை, தேசிய அரசுப்பேரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

நீதியமைச்சரினால் தாக்கல்செய்யப்படவிருக்கும் இச்சட்டமூலம் சம்பந்தமான குழுநிலை விவாதம், நாளைய தினமே நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக தேசிய அரசுப்பேரவையின் வழமையான நிகழ்ச்சிகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

**அரசியலமைப்பு நீதிமன்றத்தில்**

இந்த நகல் மசோதா நேற்று, அரசியல் நீதிமன்றத்தில் அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டது. பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் திரு. சில்வா, இந்தச் சட்டமூலத்தை சமர்ப்பித்து விளக்கினார்.

**அரசு விடுத்த அறிக்கை**

தமிழ்ஈழ விடுதலைப்புலி இயக்கத்தினர் வன்செயல்களில் ஈடுபட்டுள்ளதால் பொதுமக்களின் பாதுகாப்புக்கு ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்க்கும் பொருட்டு இது போன்ற இயக்கங்கள் தடை செய்யப்படுகின்றன என்றும், இவ்வாறான இயக்கங்களுடன் தொடர்புகொண்டவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகளைத் தடைசெய்வதற்கான விதிகளும் இச்சட்டமூலத்தில் உள்ளன என்றும் அரசு அறிவித்துள்ளது.

**ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்கள்**

புதிய சட்டமூலத்தின் மூலம், நாட்டுமக்களைப் பாதிக்கும் வகையில் பலாத்காரத்தில் அல்லது வன்செயல்களில் ஈடுபடுவோரை அல்லது ஈடுபடும் இயக்கங்களைத் தடைசெய்ய ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது

எந்த ஒரு வன்செயல் இயக்கமானது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பலாத்காரத்தில் ஈடுபட்டால் அல்லது தூண்டினால் அல்லது தூண்டுவதாகக் கருதப்பட்டால் அதனை உடனடியாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் தடைசெய்ய புதிய சட்டமூலங்கள் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்குகின்றன.

புதியசட்டமூலம் அமுலுக்கு வரும் பட்சத்தில் உடனடியாக தமிழீழ விடுதலைப் புலி இயக்கம் அதுபோன்ற இயக்கங்கள் தடைசெய்யப்படுகின்றன.

**இவையும் சட்டவிரோதம்**

இந்த இயக்கங்கள் தடை செய்யப்படும்பொழுது, இவற்றுடன் தொடர்புடையவைகளும் ஏககாலத்தில் தடை

[6-ம் பக்கம் பார்க்க]

---

வவுனியாவில் நேற்றிரவு

## ஹோட்டல் சேதமானது; ஜனாதிபதியுடன் எம்.பி. தொடர்பு

[வவுனியா]

வவுனியா நகரிப்பகுதியிலுள்ள பிரபல ஹோட்டலொன்று இனந்தெரியாதவரால் சேதப்படுத்தப்பட்டது. இச்சம்பவம் நேற்று இரவு சுமார் 7 மணியளவில் நிகழ்ந்தது.

ஹோட்டலில் வேலைபார்

[5-ம் பக்கம் பார்க்க]

---

## ஏலத்தில் ஒரு உலக சாதனை!

(கொழும்பு)

நேற்று இங்கு நடைபெற்ற தேயிலை ஏல விற்பனையில் 'இீவர்ரிட்ஸ்' என்ற சிறந்த ரகத் தேயிலை உலக சாதனையை ஏற்படுத்தியது!

இத் தேயிலை, ஒரு கிலோ கிறும் 560 ரூபாவாக ஏலத்தில் விற்பனையானது.

சிறந்த ரகத் தேயிலை எதுவும் முன்னர் இந்த விலைக்கு ஏலத்தில் விற்பனையாகவில்லை. இத்தேயிலை மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

---

## கைதான வாமதேவன்

(கொழும்பு)

உஸ்வெலியாவிலுள்ள ஒரு தோட்டத்தில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்ட வாமதேவன் நேற்றுக் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பிலிருந்து அட்டன் சென்ற விசேஷ சி ஐ டி. பொலிஸார் வாமதேவனை பலத்தபாதுகாப்புடன் இங்கு அழைத்துவந்துள்ளனர். இவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்.

**நிருபர் விசாரணை**

கொழும்பிலிருந்து வெளிவரும் ஒருதமிழ்ப் பத்திரிகையின் நிருபர் ஒருவரும் நேற்று முன்தினம் பொலிசாரினால் விசாரணை செய்யப்பட்டார்.

இதனிடையே கொழும்பில் பல தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

(ம)

---

## தெற்கில் பெருவெள்ளம்; அக்குரஸ்'ஸ கடும் பாதிப்பு

[கொழும்பு]

தென்இலங்கையில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வாரத்துக்கான பங்கீட்டுப்பொருட்களை இலவசமாக வழங்குமாறு பிரதி வர்த்தக அமைச்சர் திரு எம். எஸ். அமரசிறி உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளையில் மீட்புப்பணிகளை மேற்கொண்டுவரும் கடற்படைப் படகுகளுக்கு உதவியாக தனியார் படகுகளும் அப்பகுதிகளுக்கு அழைக்கப்பட்டுள்ளன.

சமூகசேவைகள் அமைச்சர் திரு. அசோக கருணாரத்னவும் மற்றும் அதிகாரிகளும் நேற்று வெள்ளநிலைமைகளை நேரில் பார்வையிட்டனர்.

அக்குரஸ்ஸப்பகுதி முழுவதும் நீரில் மூழ்கிவிட்டதுடன் இப்பகுதி ஏனைய பகுதிகளுடன் துண்டிக்கப்பட்டுள்ளது. வீடிழந்த ஆயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறி அருகே உள்ள கிராமங்களில் தஞ்சம்புகுந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரத்தினபுரி, களுத்துறைப் பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இங்கு சகல கிணறுகளும் சிதைந்துவிட்டன.

கொழும்பில் களனிகங்கையின் நீர்மட்டம் உயர்ந்து வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. நாகலகமவீதியில் 4 அடி 7 அங்குல உயரத்துக்கு வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

---

நவீன மார்க்கட்டில்

## 2 கடைகள் மூலம் ரூ. 78,000 வசூல்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட்டிலுள்ள இரு கடைகளை சபையோரட்பேற்று ரெண்டர் வழங்கியதால் சபைக்கு 78 000 ரூபா கிடைத்துள்ளது

நவீன மார்க்கட்டிலுள்ள 54ஏ, 18ஏ ஆகிய இரு கடைகளுமே ரெண்டருக்கு வழங்கப்பட்ட கடைகளாகும்.

ஒருகடை மூலம் 42,000 ரூபாவும் மற்றக்கடை மூலம் 36, 000 ரூபாவும் சபைக்குக் கிடைத்துள்ளது.

பஸ் நிலையத்திலுள்ள கடையொன்று மூலம் கிடைத்துள்ள 42, 000 ரூபாவும் சேர்த்து 3 கடைகள் மூலமும் சபைக்கு 1, 20, 600 ரூபா கிடைத்துள்ளது

72-ம் ஆண்டு திரு அல்பிரட் துரையப்பா மேயராக இருந்த போது நவீன மார்க்கட் கடைகள் வழங்கப்பட்டபோது ஒரு கடைமூலம் சபைக்கு 2400 ரூபா மட்டுமே கிடைத்தது.

[ம]

## வரி விளம்பரம்

### தேவை

பரந்தன் டவுண் சமத்தில் இருப்பதற்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஐந்து சிறிய குடும்பங்கள் தேவை. நேரில் சந்திக்கவும். சமத்திலும் வெளியில் சென்றும் வேலை பார்க்கலாம். 15, சோமசுந்தரம் அவனியு, கச்சேரியடி, சண்டிக்குளி, யாழ்ப்பாணம். 9312

நெசவுத் தொழிலில் அனுபவம் வாய்ந்த ஆசிரியையும், தறியில் வேலை செய்யக்கூடிய பெண்களும் உடனே தேவை. நேரில் வரவும். நிமலா நெசவு நிலையம், (புரக்டர் எம். எம். சுல்தான்) 17, முகிதீன் பள்ளி ரோட், யாழ்ப்பாணம். 9311

காசாளர் தேவை. ஆண், பெண், இருபாலாரும் மனுச் செய்யலாம். நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். 10, மெயின் வீதி, யாழ்ப்பாணம். 9308

கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்கு உள்ளவர்கள் கேற்கூறிய விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளவும். சு. சிவபாலன் பிறதர்ஸ், உரும்பிராய். 9314

### விற்பனைக்கு

பால் மாடொன்றும், இரண்டு நல்ல இன ஆடுகளும், இரண்டு வேப்பமரமும் விற்பனைக்குண்டு. முருகையா, 92, கண்டிவீதி, யாழ்ப்பாணம். 9299

மழலை இன்பம் (அரிச்சுவடி ஆசான்) ரூபா மூன்று மற்றும் வெளிநாட்டு ஆங்கில தமிழ் புத்தகங்கள், ரைப்பிங் பேப்பர் டசின் -/60 சதம், மெசின் ஊசி -/60 சதம், பிறஸ் ஸ்ரட்கள் டசின் -/42 சதம், சேப்டி பின் டசின் -/65 சதம், மற்றும் சகல உபகரணங்களும் தினசரி பாவனைப் பொருட்களும் ஒரே இடத்தில் பெறுவதற்கு-ஏ. கி. எஸ். குரூப் பேம்ஸ், ஏயர் லைலோனுக்கு முன்பாக யாழ்ப்பாணம். தொலைபேசி 7460. 9296

சவுலெட்வான் (Chevrolet Van) டீசல் என்ஜின் இணைக்கப் பெற்றது. ஈ. வை. ஒன்றின் A. 40 கார். விபரங்களுக்கு கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்பு கொள்ளவும். கு. இராசரத்தினம், மன்னன் தோட்டம், மூளாய், சுழிபுரம். 9307

19-5-78 வல்லிவிழாங்குளம் அம்மன் கோவில் பொங்கல் விழாவில் எமது விளம்பர விற்பனை வாகனத்தில் மிக்க வைத் தயாரிப்புப் பொருட்கள் யாவும் சகாய விற்பனை நடைபெறும். மேலுறைகளை சேகரித்து வைத்திருப்போர் விளம்பர வாகனத்தில் கொடுத்து சிறந்த பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் மில்க்வைற், யாழ்ப்பாணம். 9304

**Y's Men's Club of Jaffna.**

Classes in Sewing, Hair Styling, Cookery, Batik printing and Spoken English for Girls on week days. Classes will commence immediately. Contact: Mrs. J. Pullenayagam, 873, Hospital Road, Jaffna 9306

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


# கட்டுவன் கொள்ளை இருவர் கைது

(மாவிட்டபுரம்)

கட்டுவனில் இடம் பெற்ற துணிகரக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசாரால் மூவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுவனைச் சேர்ந்த திருமதி சிவபாக்கியம் என்பவரது வீட்டினுள் துப்பாக்கிகள் சகிதம் துணிகளால் முகத்தில் கட்டிக்கொண்டு புகுந்த கோஷ்டி ஒன்று சங்கிலி, காப்பு என்பவற்றை கொள்ளையடித்த சமயம் கூக்குரல் கேட்டு அயலவர்கள் கூடிவிட அத்துடன் கைவரிசையை முடித்துக்கொண்டு அவர்கள் தப்பியோடியபோது தம்மைப் பிடிக்க முயன்ற நபரையும் கத்தியால் குத்திவிட்டு அவர்கள் தலைமறைவாகிளுர்கள்.

இது குறித்து காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டதையடுத்து குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் ஆரியசேன, சார்ஜன்ட் தியாகராசா ஆகியோர் தீவிர விசாரணையிலீடுபட்டு கட்டுவனைச்சேர்ந்த ரி. செல்வராசா என்பவரையும் யாழ்ப்பாணத்தில் வைத்து இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். (உ)

# யாழ். நீர் விநியோகம்: ரூ. 5லட்சம் சபைவழங்கியது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நீர் விநியோகத் திட்டத்திற்கு கடன்பெருமல் சபை நிதியிலிருந்து 5 லட்சம் ரூபா உடனடியாக வழங்கப்பட்டுள்ளது. நீர்விநியோக திட்ட வேலை விரைவில் ஆரம்பமாகும்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. கே. சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வரவுசெலவுத் திட்டத்தில் நீர்விநியோகத்திற்கு 4 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது கதினர். தற்போது நீர்விநியோகத் திட்டத்திற்கு 5 லட்சம் கோரியுள்ளார்கள்.

வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 4 லட்சத்துடன் நவீன மார்க்கட் பஸ் நிலையத்தில் டெண்டர் மூலம் வழங்கப்பட்ட 3 கடையாலும் கிடைத்த 1,20,000 ரூபாவில், 1லட்சத்தையும் சேர்த்து 5லட்சம் ரூபா நீர்விநியோக திட்டத்திற்கு உடனடியாக வழங்கப்பட்டுள்ளது என ஆணையாளர் திரு. கே. சிவஞானம்

இளவாலை ஆலய விவகாரம்:

# நால்வரை பொலிசார் தேடுகின்றனர்

(மாவிட்டபுரம்)

இளவாலையில் கிறிஸ்தவ தேவாலயத்தினுள் சம்பிரதாய மீறலால் ஏற்பட்டதாகக்கூறப்படும் கோஷ்டிச் சண்டை தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசார் நால்வரை சந்தேக நபர்களைத்தேடி வலை விரித்துள்ளனர்.

இளவாலை பிலிப்பனேரியார் ஆலயத்தினுள் வழக்கத்திற்கு மாருக ஒரு பிணத்தை உள்ளே கொண்டுசென்ற சமயம் ஏற்பட்டதாகக் கூறப்படும் கோஷ்டி மோதலில் இருவர் படுகாயமடைந்ததுடன் மேலும் பலர் காயங்களுக்குள்ளானுர்கள் என்பது தெரிந்ததே.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை செய்துவரும் காங்கேசன்துறைப் பொலிசார் இளவாலையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை ஆனந்தராசா, ஞானப்பிரகாசம் ஜெயலிங்கம், விசயரத்தினம் இராசகுலேந்திரம், விசயரத்தினம் ஜெயசீலன் ஆகிய நால்வரை சந்தேகத்தின்பேரில் தேடிவருகின்றனர்.

இளவாலைப் பகுதியில் தற்போது அமைதி ஏற்பட்டுள்ளது. (உ)


மாநகரசபை யாழ்ப்பாணம்

**பகிரங்க ஏல விற்பனை**

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் (இந்துமகளிர் மகாவித்தியாலயத்துக்கு அருகில்) உள்ள அபாயகரமான மருதமரமொன்றும், பட்டமரமொன்றும் 24-5-78 ஆம் திகதி மு. ப. 10-00 மணியளவில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பணத்தை உடனடியாகச் செலுத்தி மரங்களை 3 நாட்களுக்குள் வெட்டி அப்புறப்படுத்தல் வேண்டும்.

க. சிவஞானம்
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
12 5-78. 9310

**திருமண அழைப்பு**

**கணேசா — தயானந்தி**

ஏகாம்பரநாதன் கணேசா
(பொறியியலாளர், விவசாயத் திணைக்களம், கொழும்பு)
அவர்களுக்கும்
எனது மகள்
தயானந்திக்கும்
19-5-78 வெள்ளிக்கிழமை காலை 7-30 தொடக்கம் 9-30 வரையுள்ள
சுபமுகூர்த்தத்தில் மணமாளிகலத்தில்
(241, நாவலர் வீதி. யாழ்ப்பாணம்).
திருமணம் நிகழும்.
உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

R. C. மன்மதராயன் J. P-யும்
பாரியாரும்

9313


"யாழ். நவீன மார்க்கட்

# 2-ம்கட்ட வேலைகள் 3மாதகாலத்தில் முடிவுறும்"

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் 2ம் கட்ட வேலைகள் 3 மாத காலத்திற்குள் முடிந்துவிடுமென ஆணையாளர் திரு. கே. சிவஞானம் தெரிவித்தார்.

சுமார் 15 லட்சம் ரூபாவில் கட்டப்பட்டுவரும், நவீன மார்க்கட் வேலைகள், கடந்த சில மாதங்களாக நடைபெருமலிருந்தது. தற்போது மீண்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நவீனமார்க்கட் 2ம் கட்ட பகுதியில் 42 கடைகள் கட்டப்படவிருக்கின்றன.

மேல்மாடியில் ஒரு மண்டபமும், 2சிறுவர் சினிமா தியேட்டர்களும் கட்டப்படும். (ஈ)

"கூட்டணிக்கிளைகள்

# பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப பாடுபடவேண்டும்"

(பண்டத்தரிப்பு.)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் அடிப்படை இலட்சியத்தை வென்றெடுக்கவும் தமிழ்ப் பிரதேசங்களின் பொருளாதார வளத்தை கட்டியெழுப்பவும் புனரமைப்புச்செய்யப்பட்ட கூட்டணிக் கிளைகள் பாடுபட வேண்டும். வெறும் கோட்டாக்கள் அரசநியமனங்கள், இடமாற்றங்கள் என்பனவற்றை பெறுவதை மட்டும் இலட்சியமாக கொண்டிருக்காது கட்சியின் நோக்கங்களை செயல்படுத்தி தமிழ்ஈழம் காண்பதையே முக்கிய இலட்சியமாகக்கொண்டு இயங்க வேண்டும்''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் அமைப்புக் கூட்டத்திற்கு தலைமை வகித்து உரையாற்றுகையில் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு குறிப்பிட்டார்.

சித்தன்கேணியிலுள்ள வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணி மத்திய அலுவலகத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தொகுதியிலுள்ள சகல கிராமங்களிலிருந்தும் புனரமைப்புச்செய்யப்பட்ட கூட்டணி கிளையின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

திரு. திருநாவுக்கரசு அவர்கள் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிடுதாவது:

இறிலங்காசுதந்திரக்கட்சியினர் தமது ஆட்சிக்காலத்தின் போது இப்பகுதியில் தமது கட்சிக் கிளைகளை நிறுவினர்கள். தமது கட்சி இலட்சியங்களை இங்கு பரப்பாது கோட்டாக்கள் நியமனங்கள் பெறுவதில் மாத்திரம் அக்கறை காட்டினர்கள். அதன்பலனாக தேர்தலுக்கு பின்பு இருந்த இடம் தெரியாது அந்த கிளைகள் மறைந்துவிட்டன என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும். எமது இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் என்பதை கிளை உறுப்பினர்கள் நன்கு உணரவேண்டும். ஒவ்வொரு கிளையும் குறைந்தது 200 உறுப்பினர்களையாவது சேர்க்கவேண்டும். தமிழ்ஈழப் போராட்டத்தில் ஆத்மசக்தியுடன் பங்குபற்றவல்ல மன உறுதிபடைத்த உறுப்பினர்களே எமக்குத் தேவை. எதிர்வரும் ஜூன் மாதம் அரசாங்கம் தமிழர் பிரச்னையில் எவ்விதம் நடந்துகொள்கின்றது என்பதை அவதானித்து வருகின்றோம். நாம் எதற்கும் ஆயத்தமான நிலையில் தயார்நிலையில் இருக்க வேண்டும். எமது தொகுதி ஒரு முன்மாதிரியான தொகுதியாக மிளிரவேண்டும். இதற்கு ஒவ்வொரு கூட்டணிக் கிளையும் ஒத்துழைப்பு தரவேண்டும்.

மற்றும் கூட்டணிக் கிளைகளின் பிரதிநிதிகளும் இக் கூட்டத்தில் உரையாற்றினர்கள்.

பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: வட்டுக்கோட்டை எம். பி. திரு. திருநாவுக்கரசு, உபதலைவர் சட்டத்தரணி மு. கதிர்காமநாதன், செயலாளர்: க. அமிர்தலிங்கம் உபசெயலாளர்: பண்டிதர் ப. இராசகுரு, பொருளாளர்: ச. பூபாலசிங்கம். தொகுதியிலுள்ள சகல கூட்டணிக் கிளைகளிலிருந்தும் ஒரு பிரதிநிதிவீதம் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். (இ)

# வைகாசி விசாகவிழா

(சுழிபுரம்)

வைகாசி விசாகவிழா வரும் விசாக தினத்தன்று தொல்புரம் மாணு முதலியார்மட பரிபாலகர் ஏற்பாட்டுக்கமைய அராலியிலுள்ள மட மண்டபத்தில் நடைபெறும்.

பொங்கல் பூஜையும், விரிவுரையும் சிறப்பு அம்சமாக இடம்பெறும். சங்கச் செயலாளர் சன். கந்தையா இதற்கான சகல ஏற்பாட்டையும் கவனித்து வருகின்றார். (உ)

# மிளகாய் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

விற்பனைத் திணைக்களம் விவசாயிகளிடமிருந்து செத்தல் மிளகாயை இருத்தல் 7 ரூபா வீதம் கொள்வனவு செய்து வருகிறது.

வடபகுதியில் வவனியா, கிளிநொச்சி, துணுக்காய் பூநகரி, சாவகச்சேரி. பருத்தித்துறை கன்ஞகம், யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை உட்பட மற்றும் பல இடங்களில் உள்ள விற்பனைத்திணைக்கள கொள்வனவு நிலையங்களிலிருந்து மிளகாய் கொள்வனவு செய்யப்பட்டுவருகிறது. (ச)

# இடமாற்றம் ரத்து

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட இரு ஆசிரியர்களின் இடமாற்றம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர் திரு. வே பஞ்சாட்சரம், வரணி மகாவித்தியாலயத்திற்கும், ஆசிரியர் திரு. ஏ. ஆறுமுகம், மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்திற்கும் இம்மாதம் 2ம் தேதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். (ச)

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

அல்லைப்பிட்டி கிராமசேவையாளர் திரு. எஸ் ஜே செல்லத்துரையின் இடமாற்றம் ரத்துசெய்யப்பட்டுள்ளது.

இவர் அல்லைப்பிட்டியிலிருந்து கனிபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். (ச)

ஈழநாடு
The Eelanaadu

## அறிவியலுக்கு ஆக்கம்

தமிழ்மக்களும் ஏனைய இனங்களைப் போல முன்னேற்றம் அடைந்தவர்களாக வாழவேண்டுமானால் அறிவியல் முயற்சிகளுக்கு ஆக்கம் தரவேண்டும்.

தொண்டமானாறு கடலேரியின் பயன்பாடுபற்றிய கருத்தரங்கில் பேசிய கடற்றொழில் ஆராய்ச்சியாளரான திரு. க. சச்சிதானந்தன் மேற்கண்டவாறு நல்லதொரு கருத்தை வெளியிட்டுள்ளார்.

தொண்டமானாறு வெளிக்கள ஆராய்ச்சிநிலையத்தில் தொண்டமானாறு கடலேரியின் பயன்பாடு பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. இக் கருத்தரங்கில் பேசிய பலரும் பயனுள்ள நல்ல கருத்துக்களைத் தெரிவித்திருக்கின்றனர்.

தொண்டமானாறுகடலேரி யாழ்ப்பாண மக்களுக்கு முழுமையாகப் பயன்பட வேண்டுமானால் தொண்டமானாற்றிலும், நாவற்குழியிலுமுள்ள தடுப்புகள் நீக்கப்பட்டுக் கடலோடுள்ள தொடுப்புகள் பலப்படுத்தப் படவேண்டும் என்றும் திரு. சச்சிதானந்தன் யோசனை தெரிவித்திருக்கிறார்.

தொண்டமானாறு கடலேரித்திட்டம் அதாவது தொண்டமானாற்றிலிருந்து நாவற்குழி வரையுள்ள ஏரியை நன்னீராக்குவதற்கான திட்டத்திற்குப் பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டது. ஆயினும் அது பயனளிக்கவில்லை.

அந்தத் திட்டத்தைக் கைவிட்டு தொண்டமானாறு கடலேரி யாழ்ப்பாண மக்களுக்கு முழுமையாகப் பயன்படக்கூடிய வழிவகைகளை மேற்கொள்வதற்கு இக் கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்ட யோசனைகள் உதவ வேண்டும்.

தொண்டமானாற்றுக்கு அருகே தலா அரை ஏக்கர் பண்ணைகளாக அறுநூறு ஏக்கரில் ஆயிரம் மீன் பண்ணைகளை அமைக்கலா மென்றும் நாலாயிரம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கலா மென்பதும் கலாநிதி சித்திர வடிவேலு தெரிவித்துள்ள யோசனை.

தொண்டமானாறு விஞ்ஞான வெளிக்கள ஆராய்ச்சி நிலையம் பயனுள்ள பல ஆராய்ச்சிகளைச் செய்துவருகிறது.

கடலேரியை நன்னீராக்கும் திட்டம் கைவிடப்பட்டு தொடர்ந்தும் இந்த ஏரியை உவர்நீர் ஏரியாக வைத்து அதை ஆழமாக்கி மீன் இனங்களை வளர்ப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஏரியின் கரையோரங்களில் தாவரங்களை வளர்க்கவும் கரையோரங்களை அடுத்த பகுதிகளில் மழைநீர் ஏரிக்குச் செல்லாது தடுத்து குளங்களை உண்டாக்கி நன்னீரைத் தேக்கி வைத்து விவசாயத்துக்குப் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இத் திட்டங்கள் கடற்றொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் பெரும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

வடபகுதியின் பொருளாதாரம் எதிர்காலத்தில் கடற்றொழிலிலும் விவசாயத்திலுமே பெரிதும் தங்கியிருக்கிறது.

எனவே திரு. சச்சிதானந்தன் கூறியுள்ளபடி அறிவியல் ஆக்கத்துக்கு ஆதரவளிக்கவேண்டியது பொதுமக்களின் கடமையும் பொறுப்புமாகும்.

# 'கலவரம் யாழ்ப்பாணத்துக்கு முன்னரே மலையகத்தில் மூண்டது''

## கண்டியில் சன்சோனிக் கமிஷன்முன் சொக்ஸி கியூ. ஸி. தொடக்கவுரை

(கண்டி)

''யாழ்ப்பாணத்தில் கலவரம் ஏற்படு முன்னரே மலையகத்தில் மூண்டுவிட்டது. மலையகத் தோட்டங்களில் மிக மோசமானவன்செயல்கள் அரசியல் ரீதியில் நடாத்தப்பட்டன. அரசுக்குச் சொந்தமான வாகனங்களில் குண்டர்கள் அழைத்து வரப்பட்டனர்.''

இவ்வாறு கடந்த ஆகஸ்டில் மலையகப் பகுதிகளில் நடந்த வன்செயல்கள் தொடர்பான நிலையை விளக்குகையில் நேற்று முன்தினம் கண்டியில் கூடிய சன்சோனி விசாரணைக்கமிஷன் முன் இ. தொ. கா. சார்பில் ஆஜராகி ஆரம்ப உரை நிகழ்த்திய சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸி கியூ. ஸி. தெரிவித்தார்.

சன்சோனிக்கமிஷன் விசாரணை கண்டியில் சாரணர் இயக்க மண்டபத்தில் ஆரம்பமானது.

இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி., பொதுச்செயலாளர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, நிதிக்காரியதரிசி திரு. வி. அண்ணாமலை முதலானோர் விசாரணையின்போது பிரசன்னமாயிருந்தனர்.

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மக்களின் காவலனாக விளங்கும் இ. தொ. கா. சார்பில் தாம் ஆஜராவதாக விசாரணை ஆரம்பத்தில் தெரிவித்துக்கொண்ட திரு. சொக்ஸி தமது ஆரம்ப உரையில் தெரிவித்ததாவது:

''இந்நாட்டு இந்திய வம்சாவளி மக்களின் 80 சத விகிதமானோர் தோட்டப்புறங்களிலும் 20 சத விகிதமானோர் வர்த்தகம் மற்றும் தொழில்களில் ஈடுபட்டு நகர்ப்புறங்களிலும் வாழ்கின்றனர். இவர்களுக்கு பிரிவினை கோரும் வடக்கு, கிழக்கு அரசியல் இயக்கங்களுடன் வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ சம்பந்தம் இல்லை. எவ்வித தொடர்பும் கிடையாது.

### வீடுகள் சூறை

கடந்த ஆகஸ்ட் கலவரத்தின்போது மலையகத்திலும் இந்திய வம்சாவளியினரின் வீடுகள் சூறையாடப்பட்டன. அவர்கள் பல்வேறு இம்சைகளுக்கு இலக்காகினர். அவர்களது உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

### பொதுத்தேர்தலுக்கு முன்னரும்

சென்ற பொதுத்தேர்தலுக்கு முன்னரும் பூண்டுலோயாப் பகுதியில் பல பொக்குண சொய்ஸி முதலான தோட்டங்களில் வசித்த தோட்டத் தொழிலாளரை அங்கிருந்து விரட்டிவிட்டு கிராமப்புற சிங்கள மக்களை அவ்விடங்களில் குடியமர்த்துவதற்கு அரசியல் ரீதியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இ. தொ. கா. தலையிட்டதால் இம்முயற்சி பின்னர் தவிர்க்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து புசல்லாவைப் பகுதியில் டெல்டா, சங்குவாரி ஆகிய தோட்டங்களிலும் மிகமோசமான வன்செயல்கள் நடந்தன.

### யாழ்ப்பாணக் கலவரத்துக்கு முன்னரே நடந்தது

இவ்வன்செயல்கள் அனைத்துமே யாழ்ப்பாணத்தில் கலவரம் ஏற்படுமுன்னரே நடைபெற்றவை என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும். இந்த செயல்களுக்கு அரசியல் பின்னணிதான் காரணமாக இருக்கலாம்.

### இதன் நோக்கம்

தோட்டப்புற மக்களை அவர்களது காணிகள், வீடுகள் என்பவற்றிலிருந்து விரட்டவும் அதே நேரத்தில் அவ்விடத்தில் கிராமப்புற மக்களைக் குடியமர்த்தி, காணிகளைப் பிரித்துக்கொடுக்கவும் முயற்சிகள் நடந்துள்ளன.

### அரசு வாகனங்களில் வந்த குண்டர்கள்

அரசுக்குச் சொந்தமான வாகனங்களில் குண்டர்கள் அழைத்துச் செல்லப்பட்டு டெல்டா, சங்குவாரி தோட்டங்களில் வீடுகளைக் கொள்ளையடித்துச், அவற்றைத் தீக்கிரையாக்கவும் ஈடுபடுத்தப்பட்டனர்.

### புதிய அரசுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்கம்

பொதுத் தேர்தலின் பின்னரும் நடந்த பல அசம்பாவிதங்களுக்கு அரசியல் சக்திகள் பின்னணியாக இருந்தன என்ற சந்தேகம் எழுகிறது. புதிய அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தவே இவ்வாறான செயல்கள் மேற்கொள்ளப்பட்டன என்றே நாம் கருதுகிறோம்.

வன்செயல்களின்போது கண்டிப் பகுதியில் உடுவெல, வத்தேகம, கோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தோட்ட மக்களுக்கெதிராக பெருந்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

### உயிரோடு இருவர் தீக்கிரை

பொலிஸ் நிலையத்திற்கு மிக அருகிலிருந்த வத்தேகம நகரக் கடைகள் முற்றாக அழித்தொழிக்கப்பட்டன. ஒரு கடையினுள் வைத்துப் பூட்டப்பட்ட இருவர் உயிரோடு தீக்கிரையாக்கப்பட்டனர்.

தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட அரசியல் சக்திகளும் திட்டமிடப்பட்ட ஒரு குழுவினரும் இவ்வாறான செயல்களுக்குப் பின்னணியாக இருந்திருக்கலாம் என்பது புலனாகிறது.

### தமிழர்க்கு எதிரான சுலோகம்

வெளியிடங்களில் இருந்து தமிழர்களுக்கு எதிரான சுலோகங்களைத் தாங்கிய வாகனங்களில் கண்டிப் பகுதிக்கு வந்த குண்டர்கள் தமிழர்களுக்கெதிரான பெரப்பிரசாரம் செய்து வன்செயல்களை மேலும் தூண்டிவிட்டனர்.

வடக்கிலும் மலையகத்திலும் நடந்த வன்செயல்களுக்கான காரணங்கள் வெவ்வேறானவை.

### வடக்கில் ஏற்பட்ட நிலைமை

வடக்கில் பிரிவினை கோரும் அரசியல் குழுவாரல் மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையே ஏற்பட்ட மனக்கசப்பு அங்கு வன்செயல்களைத் தூண்டியிருக்கலாம். ஆனால் மலையகத்தில் இத்தகைய மனக்கசப்பு எதுவும் இருந்ததில்லை. எனவே தான் வடக்கு மலையக வன்செயல்களுக்கான காரணங்கள் மாறுபட்டவை எனக் கூறுகின்றேன்.

### இ. தொ. கா. தனியியக்கமாகவே போட்டியிட்டது

இ. தொ. கா. கடந்த பொதுத்தேர்தலில் தனி அரசியல் இயக்கமாகவே போட்டியிட்டது எனவே அதற்கு எந்த அரசியல் கட்சியுடனும் உறவுகிடையாது. மலையக வன்செயல்களில் பாதிக்கப்பட்டோரின் விபரங்களை இ. தொ. கா. திரட்டியுள்ளது. இது தொடர்பான சாட்சியங்களை கமிஷன் முன் அது சமர்ப்பிக்கும். கிராமப் புறங்களை அண்டிவாழும் மலைய மக்கள் மீது வன்செயல்கள் தூண்டிவிடப்பட்டதற்குக் காரணம் அவ்விடங்களிலிருந்து அவர்களை, விரட்டியடிப்பதுதான்.

### புதிய சிங்களக் குடியேற்றங்கள்

கண்டிப் பிரதேசத்தில் மலையக மக்கள் சிறுபான்மையினராக வாழும் பகுதிகளிலேயே வன்செயல்கள் நடந்துள்ளன. இப்பகுதியில் புதிய சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

இ. தொ. கா. சார்பில் சட்டத்தரணிகள் சொக்ஸி ஐயா பெரி. சுந்தரம், எஸ். உருத்திரமூர்த்தி ஆகியோரும் தமிழர் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் சட்டத்தரணிகள் மணிவாசகம் அண்டலூட் மகாதேவ சகாயம் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்.

கமிஷன் செயலாளர் திரு. திஸ்ஸ தேவேந்திராவுடன் உதவிச் செயலாளர் திரு. சிவசுப்பிரமணியம், அரசதட்டத்தரணி எம். தென்னக்கோன். மொழிபெயர்ப்பாளர் திரு. எம். எஸ். கந்தசாமி ஆகியோர் விசாரணைக்கு உதவி நல்கினர். (உ)

# 'ஊரடங்குவேளை குண்டர்கள் உவகையுடன் வீதியில் உலவினர்'

## சன்சோனிக் கமிஷன் முன் நகரசபை அதிகாரி சாட்சியம்

(கண்டி)

''கலவரவேளை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட போது எங்களால் வெளியே வரவேமுடியாதிருந்தது ஆனால் வன்செயலில் ஈடுபட்டவர்களோ மிகத் தாராளமாக வீதிகளில் உலாவினர். 'பிக்னிக்' போவதைப் போல் அங்குமிங்கும் மகிழ்ச்சியுடன திரிந்தனர்''

இவ்வாறு கண்டியில் சன்சோனிக்கமிஷன் முன் சாட்சியமளித்த கண்டி நகரசபை உதவிநிர்வாக அதிகாரியான திரு. கி. தம்பிராஜா கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: ''கொள்ளையடித்த பொருட்களை தள்ளுவண்டிகளில் வைத்து அவர்கள் எடுத்துச் சென்றனர். அப்போதும் பொலிசார் வரவில்லை.

ஆகஸ்ட் 19ம் திகதி எனது வீடும் உடைக்கப்பட்டு பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. 52,000 ரூபா எனக்கு நஷ்டமேற்பட்டது.

இப்போது எனது வீட்டை விற்றுவிட்டு ஒரு சிறிய அறையில் தங்கியிருக்கிறேன். அணிந்திருந்த ஆடையைத் தவிர எதுவுமே எனக்கு மிஞ்சவில்லை.

### இராணுவம் பொறுப்பேற்றுவிட்டது என்றார் எஸ். பி.

20ம் திகதி நான் கண்டி பொலிஸ் நிலையத்திற்குச் சென்று அங்கு எஸ். பி. சண்முகத்தைச் சந்தித்து எங்களை மோசமாகக் கைவிட்டுவிட்டீர்களே' எனக் கூறினேன்.

இராணுவம் பொறுப்பேற்றுவிட்டது. அவர்களிடம் பேசிக்கொள்ளுங்கள் என்று அவர் சொன்னார். பின்னர் இராணுவ அதிகாரபூர்வமான வீரதுங்க என்பவரிடம் முறையிட்டேன். அவர் உடனடியாக இராணுவ வீரர்களைக் கொடுத்து உதவியதுடன் எங்கள் பகுதியில் ஒரு இராணுவப் பணிமனையையும்

(5-ம் பக்கம் பார்க்க)

## மனவாக்கு

நமது மனச்சாட்சிக்கு எதிராக நாம் செயல்படக்கூடாது.

—காந்தியடிகள்

## கந்தரநுபூதி நூல் வெளியீடு

(சுழிபுரம்)

வழுக்கம்பரை சனசமூக பணிச் சபையினரால் வெளியிடப்படும் கந்தரநுபூதி உரை நூல் வெளியீடு ஞாயிற்றுக்கிழமை காலை சுழிபுரம் பருளை சிவசுப்பிரமணிய சுவாமிகோவிலில் நடைபெறும்.

சுழிபுரம் யோகி கா. கார்த்திகேசுவினால் எழுதப்பெற்ற உரையோடு வெளியாகும் இந்நூல் வெளியீட்டை, முன்னாள் கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை அதிபர் திரு. க. விசுவலிங்கம் நிறைவேற்றி வைப்பார்.

# இந்திய காங்கிரஸ் கட்சிகள் மீண்டும் இணையும்?

## உத்தியோக பூர்வ காங்கிரஸ் மகாநாட்டில் தீர்மானம்

புதுடில்லி, மே 16

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி தலைமையிலான இந்திரா காங்கிரஸ் கட்சியும் திரு. சவர்ண்சிங் தலைமையிலான உத்தியோகபூர்வ காங்கிரஸும் ஒன்றாக இணையவேண்டும் என்று உத்தியோகபூர்வ காங்கிரஸ் மகாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

காங்கிரஸின் 2 நாள் அரசியல் மாநாடு நேற்று புதுடில்லியில் ஆரம்பமானபோதே காங்கிரஸ் உறுப்பினர்கள் பலர் காங்கிரஸ் கட்சிகளின் இணைப்புக்குறித்து வலியுறுத்தினர்.

கண்ணியமான முறையில் இருகட்சிகளையும் இணைத்து கூட்டுத்தலைமைப் பொறுப்பில் கட்சியை ஒப்படைக்கவேண்டும் என்ற தீர்மானமும் முதல் நாள் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

### சவான் கருத்து

லோகசபையின் எதிர்க்கட்சித் தலைவரும் லோகசபையின் காங்கிரஸ் கட்சித் தலைவருமான திரு. வை. பி. சவான் இணைப்புக்குறித்து கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது!

இரு காங்கிரஸ் கட்சி இணைவது வரவேற்கக்கூடியதுதான். ஆனால் இந்த இணைப்பு பொதுவான கொள்கை, கோட்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படவேண்டும் இவ்வாறு இணைவதே இந்தியாவுக்கும் மக்களுக்கும் நன்மைபயக்கும். [இ]

# தமிழக மந்திரிசபை விஸ்தரிப்பு

## கல்யாணசுந்தரம் கண்டனம்

சென்னை, மே 16

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் மந்திரி சபையை விஸ்தரித்தமை குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் பலத்த கண்டனம் தெரிவித்துள்ளார்.

மந்திரி சபை விஸ்தரிப்பு பொதுமக்களின் வரிப்பணத்தை, பாழாக்கும் நடவடிக்கையாகும் என்று திரு. கல்யாணசுந்தரம் குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழ்நாட்டில் அரசியல் வரலாற்றில் ஆகக்கூடிய மந்திரிகள் இருப்பது எம். ஜி. ஆரின் ஆட்சியில்தான். மந்திரி சபையில், திருவாளர்கள் ராஜாராம், நாவலர் நெடுஞ்செழியன் உட்பட 8 செயலாளர்களுடன் 28 பேர் அங்கம்வகிக்கின்றனர். இதனால் பொதுமக்களின் வரிப்பணம் செலவு ஆகியதே யொழிய எதுவும் நடைபெறமாட்டாது என்றும் அவர் கூறினார். [கெ-இ]

# கழிவுப் பொருளில் தங்கம் வெள்ளி

மாஸ்கோ, மே 16

தங்கமும் வெள்ளியும் நகைகள் செய்வதற்கு மட்டுமின்றி மருந்து, போட்டோகிராப்பி, றேடியோ பொறியியல், மின் பொறியியல் முதலிய பல தொழில்களுக்கும் பயன்படுகின்றன. இந்த உலோகங்கள் கலந்த கலப்பு உலோகங்களைக் கையாளும்பொழுது அவை கெட்டுவிட்டால் அவற்றில் தங்கமும் வெள்ளியும் சிறிதளவாவது வீணாகிவிடக்கூடும். இவ்விதம் வீணாவதைத் தடுக்க ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மற்ற தொழிற்சாலைகளின் கழிவுப் பொருட்களிலிருந்து தங்கத்தையும் வெள்ளியையும் மீட்பது இந்தத் தொழிற்சாலையின் பணி.

5000த்திற்கு அதிகமான தொழிற்சாலைகளும் மருத்துவமனைகளும் போட்டோத் தொழில் நிலையங்களும் இத் தொழிற்சாலைக்கு மூலப் பொருள்களை அனுப்புகின்றன. இவற்றைச் சுத்திகரிப்பதன்மூலம் பல கிலோகிராம் வெள்ளியும் தங்கமும் கிடைக்கின்றன. [இ]

# தென்மொழி ஆசிரியர் பெருஞ்சித்திரனார்

தமிழ் மறைக் கழகத்தின் பதினெட்டாவது திருக்குறள் மாநாட்டில் சிறப்புரையாற்றுவதற்கு யாழ்குடாநாட்டுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார் புலவர் பெருஞ்சித்திரனார்.

பெருஞ்சித்திரனார் மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கத்தைச் சேர்ந்தவர் மொழிப்பெரும்புலவர் ஞா. தேவநேயப் பாவாணருடன் இணைந்து தொடக்க காலத்தில் தென்மொழி என்னும் தனித்தமிழ் இலக்கிய திங்கள் இதழினை தொடங்கி நடத்தினார். இவ்விதழ் தெம்பரத்திற்கு அருகிலுள்ள திருப்பாதிரிப்புலியூர் என்று அழைக்கப்படும் கடலூரிலே மித்திரா என்னும் அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியாயிற்று. இவ்விதழில் தனித்தமிழ் அறிஞர்களான ம. கலை. தங்கப்பா, செம்பியன், புலவர் தி. நா. அறிவொளி, மூ. மகிழரசன், தரங்கை - பன்னீர்ச்செல்வன், குயிலை—பாவிசைக்கோ ஆகியோர் படைப்புக்கள் வெளிவருவதுண்டு. துரை மாணிக்கம் என்னும் இயற்பெயருடைய பெருஞ்சித்திரனார் ஆசிரியத் தலையங்கம், ஆராய்ச்சிக் கட்டுரைகள் கவிதைகள் ஆகியவற்றை தனித்தமிழில் ஆக்கியளிப்பார்.

தனித்தமிழ் இயக்கத்துடன் தொடர்புடைய அண்ணாமலைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை மாணவர்களோடு புலவர் பெருஞ்சித்திரனாருக்கு நட்பும், தொடர்பும் இருந்தன. தமிழ் மாணவர் மத்தியில் தென்மொழி இதழுக்கு நல்லவரவேற்புக் கிடைத்தது. தென்மொழி ஆசிரியர் அடிக்கடி அண்ணாமலை நகருக்கு வருகை தந்து தனித்தமிழ் இயக்கக் கருத்துக்களைப் பரப்புவதில் ஆர்வம் காட்டுவார். இந்தக் காலக் கட்டத்திலே தான் எனக்கும் பெருஞ்சித்திரனாருக்கும் பழக்கம் உண்டாகியது.

பெருஞ்சித்திரனார் சிறு காவியங்கள் ஆக்கி வெளியிட்டுள்ளார். அவருடைய ஆக்கங்களில் "கொய்யாக்கனி" "ஐயை" ஆகியன குறிப்பிடத்தக்கன. 'ஐயை' என்னும் சிறு பாவியம் தமிழ்ப்பெண்மையை சிறப்பிக்க எழுந்ததென்னலாகும். "ஐயை" என்ற சிறுபாவியத்துக்கு ஆசிரியர் எழுதிய முன்னுரை பலராலும் பாராட்டப்பட்டது.

ஐயை ஒரு பாவியம் மட்டுமன்று. பேதைப்பெண் ஒருத்தியின் உள்ள ஓவியம். அதில் அருவியின் இனிச் சிலிர்ப்பையும் பார்க்கலாம். தென்றலின் குளிர்ச்சியையும் நுகரலாம். எரிமலையின் சீற்றத்தையும் காணலாம்.

புலவர் பெருஞ்சித்திரனார் தனித்தமிழ் நடையில் சொற்பொழிவாற்றுவதிலும் வல்லவர். கேட்டார் பிணிக்கும் தகைமைவாய்ந்த கேளாரும் வேட்பமொழியும் சொல்வன்மை அவருக்குண்டு. பாவேந்தர் பாரதிதாசனின் கவிதைகளைத் தன் சொற்பொழிவுகளினூடே புகுத்தி புதிய எண்ணங்களுக்கு தூண்டுகோலான கருத்துக்களை வழங்குபவர்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்களை தனது பேச்சிலும் எழுத்திலும் செலுத்தி சிந்தனைக்கு வித்திட வல்லவர். தென்மொழி இதழில் அவர் கடந்த காலத்தில் எழுதிய ஆசிரியத் தலையங்கங்கள் ஆணித்தரமாக விளங்குவதைக் காணலாம், சாதிச் சழக்குகளைச் சாடி அவர் தென்மொழி இதழில் தீட்டிய தலையங்கங்கள் பலராலும் விரும்பி வரவேற்கப்பட்டன.

'சாதி' எந்த மருந்துவத்தாலும் போக்கமுடியாத மிகவும் கடுமையான, கொடுமையான ஆனால் தீர்க்கப்பட வேண்டிய தொற்றுநோயாம் நாம் பொதுவாகத் தொற்றுநோய்கள் என்று குறிப்பிடும் நோய்கள் ஏதோ ஆயிரத்தில் ஐந்து பெயர்களுக்குத்தான் பிடித்துக்கொண்டு சீரழிக்கும். ஆனால் இந்தச் சாதி என்னும் தொற்றுநோயோ பலகோடி மக்களையும் பிடித்துக்கொண்டு அவர்களைப் படாதபாடுபடுத்திக் கொண்டு வருகிறது. நாட்டையாண்ட வெள்ளையர்களாலும், பிரஞ்சுக் காரர்களாலும், போர்த்துக்கீசர்களாலும் அவர்கள் கண்டுபிடித்த மருந்துகளாலும் போக்கமுடியாத இந்த தொழுநோய் இருக்க இருக்க உள்ளுக்குள்ளேயே புரையோடி அழுகிச் சீழ்பிடித்து நாடெங்கும் நாறத் தொடங்கிவிட்டது.

புத்தர் முதல் இன்று பிறந்துள்ள குழந்தைவரை எல்லாரும் சாதியை ஒழித்துக் கட்டவே முனைந்து வருகின்றோம். இருந்தாலும் அதன் சல்லிவேரின் நுனியைக்கூட கிள்ள முடியவில்லை."

எனவருத்தப்பட்டு எழுதியுள்ள பெருஞ்சித்திரனார் சாதிக்கொடுமை, சீதனக்கொடுமை முதலியவற்றினை அகற்றுவதற்கு அன்றுதொட்டு பாடுபட்டு வருவதை நாம் பாராட்டவேண்டும்.

வள்ளுவர் கண்ட பெண்மையை, காட்டிய சமுதாயத்தை இந்நூற்றாண்டிலும் காண பெருஞ்சித்திரனார் போன்ற அறிஞர்கள் பெருமுயற்சி எடுப்பது நாம்பெற்ற பேறாகும்.

புலவர்
ஈழத்துச்சிவானந்தன்

# எகிப்தில் அடுத்தவாரம் பொதுஜன வாக்கெடுப்பு

## அரசவிரோத சக்திகளுக்கு எதிரான நடவடிக்கை குறித்து அபிப்பிராயம் கோரப்படும்

கெய்ரோ, மே 16

எகிப்தில் அரசுக்கு விரோதமான நடவடிக்கைகளுக்கு எதிராக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்த பொதுமக்களின் அபிப்பிராயங்களை அறிய எகிப்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இது குறித்து பொதுஜன வாக்கெடுப்பொன்றை நடத்த எகிப்திய அதிபர் ஜனாப் அன்வர் சதாத் தீர்மானித்துள்ளார்.

இம்மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை இந்த வாக்கெடுப்பு இடம்பெறும்.

எகிப்தில் அரசவிரோத சக்திகள் அரசுக்கு எதிரான நடவடிக்கைகளை அதிகரித்துள்ளதாகவும் இச் சக்திகளுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து பொதுமக்கள் மத்தியில் அபிப்பிராயபேதம் தோன்றியுள்ளதாக கருதப்படுவதை அடுத்தே ஜனாப் சதாத், இப் பொதுஜன வாக்கெடுப்பை மேற்கொள்ள உள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. [இ]

# கட்சி மாறினால் பதவி பறிபோகும்

## இந்திய லோகசபையில் சட்டமூலம்

புதுடில்லி, மே 16

இந்தியாவில் கட்சிமாறுபவர்களின் பதவி இழக்கச் செய்யும் சட்டமூலம் ஒன்று லோகசபையில் தாக்கல்செய்யப்பட உள்ளது.

இச்சட்டம் அமுலுக்குவந்ததும் எதிர்காலத்தில் கட்சிகளின் இலட்சியங்களை பேணிப் பாதுகாக்கப்படும் என சர்வ கட்சிகளும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

கடந்தவாரம், புதுடில்லியில் நடைபெற்ற சர்வகட்சி மாநாட்டில் இச்சட்ட மூலம் தயாரிப்பதற்கான பூர்வாங்க ஆலோசனைகள் பெறப்பட்டு சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளன.

சர்வகட்சி மாநாட்டில் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய், அமைச்சர்கள் திருவாளர்கள் ஜகஜீவன்ராம், எல். கே. அத்வாணி, ரவீந்திரவர்மா, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் திரு. சமர்முகர்ஜி, இந்திரா காங்கிரஸ் சார்பில், திரு. சி. எம். ஸ்டீபன். காங்கிரஸ் சார்பில் ஜனாப் செய்யதுமுகமது; பார்வர்ட்புளக் சார்பில் திரு. எம். சிட்டிபாபு, முஸ்லிம்லீக் சார்பில், ஜனாப் சுலைமான் சைட், அ. இ. தி. மு. க. சார்பில் திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

சர்வகட்சி மாநாட்டில் பலரும், கட்சிமாறுபவர்களுக்கு கடும் தண்டனை வழங்கப்படவேண்டுமென வற்புறுத்தியதுடன் இன்றையநிலையில், அவசியம் இச்சட்ட மூலம் நிறைவேற்றப்படவேண்டும் என்றும் கருத்துத் தெரிவித்தனர். இன்று கட்சிமாற்றத்தை தண்டிக்கும்சட்டம் இப்போது அமுலில் இல்லாததினால் இந்திரா காங்கிரஸுக்கே அதிக லாபம் கிடைக்கின்றது. என்றும் சிலர் கருத்துத் தெரிவித்தனராம். [கெ-இ]

# பங்களாதேஷில் ஒரு பாலஸ்தீனம்?

டாக்கா, மே 16

"பர்மாவிலிருந்து முஸ்லிம் மக்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக பங்களாதேஷை வந்தடைவதை அடுத்து இங்கும் ஒரு பாலஸ்தீனம் உருவாகலாம்.

இவ்வாறு பங்களாதேஷிக்கான சவூதி அரேபியத் தூதுவர் டாக்காவில் தெரிவித்தார்.

பர்மாவிலிருந்து முஸ்லிம்கள் ஆயிரக்கணக்கில் அகதிகளாக பங்களாதேஷுக்கு வந்து சேர்ந்துள்ளதை அடுத்து அங்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிபற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சுமார் ஒருலட்சம் அகதிகள் பர்மாவிலிருந்து பங்களாதேஷை வந்தடைந்திருப்பது தெரிந்ததே. [இ]

# கூட்டணிக் கிளை

[சுழிபுரம்]

வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளை நிர்வாகிகள் தெரிவு சித்தன்கேணியிலுள்ள கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றது புதிய உத்தியோகஸ்தர் விபரம் வருமாறு! தலைவர்: திரு. தா. திருநாவுக்கரசு பா. உ., காரியதரிசி: திரு. எஸ். அமரலிங்கம், உபகாரியதரிசி: பண்டிதர் ப. இராசகுரு. தனாதிகாரி: திரு. ச. பூபாலசிங்கம் நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது.

# கொழும்பில் தொண்டமான் சாட்சியமளிப்பார்

(கண்டி)

சன்சோனிக் கமிஷன் விசாரணைகள் கொழும்பில் நடைபெறும்போது இ. தொ. கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் சாட்சியமளிப்பார்.

சட்டத்தரணி திரு. கே. என். சொக்ஸி இத்தகவலை சன்சோனிக் கமிஷன் முன் தெரிவித்தார். (உ)

Rio (Jaffna) Daily 4 Shows
Caravanto Vaccares
[Color Scope]

வெஸ்லி
(வானிப்பாய்)
தினசரி 6-30, 9-45
ஜெய்சங்கர்-பத்மினி
நடித்த
பெண் தெய்வம்

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி
6-45, 10-00
பாலச்சந்திரன்-சந்திரகலா
நடித்த
வாடைக்காற்று

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா 19ம் தேதி வெள்ளிக்கிழமை காலை கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

யதுனே சுகாதார சேவை அத்தியட்சகர் டாக்டர் நா. யோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி இ. யோகநாதன் பரிசில்களை வழங்குவார்.

## புனரமைப்பு

(வேலணை)

தீவுப்பகுதியில் உள்ள பல பிரயாணிகள் சங்கத்தை மீண்டும் புனரமைத்து சிறந்த முறையில் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ)

யாழ் நவீன மார்க்கட் கடைகளின்

# குத்தகைக் கால எல்லை 7 வருடமாக நீடிப்பு

## கமிஷனரின் சிபார்சு ஏற்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நவீன மார்க்கட் கடைகளின் குத்தகைக்கான கால எல்லையை 5 வருடத்திலிருந்து 7 வருடமாக அதிகரிக்கப்படவேண்டும் என ஆணையாளர் திரு. கே. சிவஞானம் செய்த சிபார்சு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

உள்ளூராட்சி, வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சு செயலாளர் திரு. பாஸ்கரலிங்கத்துடன் யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம் யாழ். நவீனமார்க்கட் பிரச்சினை பற்றி பேச்சுவார்த்தை நடத்தினார்.

இப்பேச்சுவார்த்தையின் போதே குத்தகைக் கால எல்லையை 7 வருடமாக நீடிப்பதென முடிவு செய்யப்பட்டது.

நவீனமார்க்கட் கடைகளின் குத்தகை எல்லை 7 வருடமாக இருக்கவேண்டும் என ஆணையாளர் திரு. கே. சிவஞானம் முன்னர் சிபார்சு செய்திருந்தார்.

இலங்கை வணிகர் சங்க யாழ். கிளையினர் உள்ளூராட்சி அமைச்சுக்கு சில ஆட்சேபனைகளை தெரிவித்ததைத் தொடர்ந்து இக்கால எல்லை பற்றி உள்ளூராட்சி ஆணையாளர் ஆராய்ந்தார். இதைத் தொடர்ந்து 7 வருடத்தை 5 வருடமாக குறைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து வணிகர் சங்கக் கிளையினரின் புகார் பற்றி விசாரணை நடைபெற்று வந்தது. இப்புகார்களைத் தொடர்ந்தே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

நவீனமார்க்கட் பிரச்சினைகள் பற்றிய பேச்சுவார்த்தையின் போது இதே 7 வருட கால எல்லை புதிதாகக் கட்டப்பட்டுள்ள பஸ் நிலையக் கடைகள் பழைய மார்க்கட் கடைகளுக்கும் வழங்கவேண்டும் என ஆணையாளர் திரு. கே. சிவஞானம் செய்த சிபார்சு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பஸ் நிலைய கடையுரிமையாளர்கள் ஏற்கனவே 5 வருட குத்தகைக்கு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். இவர்களின் காலஎல்லை 7 வருடமாக நீடிக்கப்படும் என்றும் பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டது.

குத்தகைக்கால முடிவில் கேள்வி நடைமுறை தவிர நீடிப்புக்கு உரித்துடையவர்களல்ல என்று, ஒப்பந்தத்தில் உள்ள சரத்தை மாற்றவேண்டுமென்று ஆணையாளர் திரு. சிவஞானம் சிபார்சு செய்தார்.

குத்தகை முடியும் காலத்தில் டெண்டர் மூலமோ அல்லது வாடகைமீளாய்வு மூலம் கால எல்லையை நீடிக்கவோ சபைக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்ற சரத்து ஒன்று ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவேண்டும் என, ஆணையாளர் திரு. கே. சிவஞானம் சிபார்சு செய்தார். இதனை உள்ளூராட்சி அமைச்சு செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் ஏற்றுக்கொண்டார்.

இதன்படி 7 வருடம் முடிந்ததும், அக்காலத்தில் இருக்கும், சபை டெண்டர் போடுவதா அல்லது கால எல்லையை நீடிப்பதா என முடிவு செய்யும்.

உள்ளூராட்சி செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம், யாழ். ஆணையாளர் திரு. கே. சிவஞானம் செய்த சிபார்சுகளை ஏற்று அவற்றை அமுல் செய்யுமாறு உத்தரவிட்டார். (உ)

வெற்றிகரமான 3-வது மாதம்
மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.—வாணிஸ்ரீ
நடித்த
ஊருக்கு உழைப்பவன்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

லிடோ போன்: 7692
(யாழ். நகர்)
ஜெமினி-வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை

ராணி
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
நடித்த
உ த் த ம ன்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா,
விஜயகுமார், நிர்மலா, அசோகன்
நடித்த
ஜானகி சபதம்

சாந்தி
(யாழ். நகர்) போன்: 7645
தினசரி 10-15, 2-15, 6-15 10 00
சிவாஜி... ஜமுனா... வீரப்பா... கண்ணாம்பா
மருதநாட்டு வீரன்
— புத்தம் புதிய பிரதி —

Regal (Jaffna)
Daily at 4-45, 7-00 and 9-50 p.m. only
Trap On Cougar Mountain
(Color) Jungle Adventure

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் — ஜெயலலிதா
(இருவேடம்)
நடித்த
வந்தாளே மகராசி
(புதிய பிரதி)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்)
வெற்றிகரமான
தினசரி 4 காட்சிகள் 2வது வாரம்
முத்துராமன் — சந்திரகலா
நடித்த
காலங்களில் அவன் வசந்தம்
உலகச் செய்திகளும் காண்பிக்கப்படும்
(கலர்)
Also Showing World news,
Soccer—Germany vs. Italy — World Cup Tournament — Motor Cycle Display. (All in Colour)

## பாம்பு விஷத்திலிருந்து மருந்து

மாஸ்கோ, மே 16

பல நாடுகளில் பாம்பு விஷத்திலிருந்து மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன. ஆனால் ஒரு கிலோகிராம் உலர்ந்த விஷம் எடுப்பதற்கு கணிசமான அளவுள்ள 10,000 பாம்புகள் தேவைப்படுகின்றன.

சோவியத் யூனியனில் 11 விதமான விஷப்பாம்புகள் வாழ்கின்றன. அவற்றைப் பாதுகாத்து இக்கனமான முறையில் பயன்படுத்துவதற்கு அவ்வப்போது நிபுணர்களின் மாநாடுகள் நடத்தப்படுகின்றன. சில ரக விஷப் பாம்புகள், அரசுப் பாதுகாப்பில் உள்ளன. விஷப் பாம்புகளின் தொகையைப் பெருக்க தாஷ்கென்டில் உள்ள நிபுணர்கள் பெரும் பணியாற்றி வருகின்றனர்.

## ஊரடங்கு...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைத்தார். இலங்கை இரண்டாகப் பிரிந்தாலும் கண்டியில் இருந்து போவதில்லை என்று முன்னர் முடிவுசெய்திருந்தேன். ஆஸ்பத் கலவரம் என் முடிவை மாற்றிவிட்டது. வீட்டை விட்டு ஒரு சிறிய அறையிலேயே தங்கியிருக்கிறேன்'' என்றார். (உ)

## கூட்டு நடவடிக்கை

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் சுமார் 17 குளங்களை சிரமதானமூலம் செப்பனிட உதவி அரசாங்க அதிபர் திரு. மு. தம்பிமுத்துவும் வேலணை கிராம அபிவிருத்தி அதிகாரி திரு. அ. விஜயநாதனும் கூட்டாக நடவடிக்கையை எடுத்துள்ளனர்.

இந்த 17 குளங்களும் வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, சரவணை, புங்குடுதீவு, நயினாதீவு, ஆகிய இடங்களில் உள்ளவையாகும். (உ)

யாழ்.வளாக மாணவர் கைது:

## ஜனாதிபதி, பிரதமருக்கு மாணவர்மன்றம் ஆட்சேபத் தந்தி

(யாழ்ப்பாணம்)

யாழ். வளாக விஞ்ஞான பிரிவு 2ம் வருட மாணவரான இடைக்காட்டைச் சேர்ந்த வீரசிங்கம் குணசேகரம், வவுனியா கண்ணாட்டியில்வைத்து பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதை யாழ். வளாக மாணவர் மன்றத்தினர் ஆட்சேபித்துள்ளனர்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிற்கு அவர்கள் அனுப்பிவைத்துள்ள தந்தியில் எமது வளாக மாணவர் குணசேகரம், அகதிகள் புனர்வாழ்வு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது கண்ணாட்டியில்வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டு, பூசாப்பிட்டியில் சிறைவைக்கப்பட்டுள்ளார் என்றும் அவரைவிடுதலைசெய்ய முயற்சி எடுக்குமாறும் கேட்டுள்ளனர்.

இதேபோன்று பிரதமர் கல்வி மந்திரி, பேராசிரியர் கல்பகே ஆகியோருக்கும் தந்தி அனுப்பியுள்ளனர்.

குணசேகரம் அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதில் ஈடுபட்டிருந்தார் என்றும் அகதிகளுக்கு உதவி செய்வது மாணவரின் தலையாய கடமைஎன்றும் இந்த உரிமையைப் பாதுகாக்க மாணவர் தயாராக வேண்டும் என்றும் யாழ். வளாக மாணவர்மன்றத் தலைவர் திரு. வ. ஐ. ச. ஜெயபாலன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

இவர் கண்ணாட்டி அகதிகள் முகாமில் வைத்து கைது செய்யப்பட்டார். இவருடன் 7 அகதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். பாரபட்சமான நடவடிக்கையை கண்டிக்கிறோம். (க-உ)

## யாருடையது?

கிளிநொச்சி மெயின் வீதியில் எஸ். பஞ்சரத்தினம் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டை ஒன்று 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டிப்பெற்றுக்கொள்ளவும்.

## வவுனியா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

த்துக்கொண்டிருந்த தெய்வேந்திரராஜா, கனகராஜா, இவ்வாறான ஆகியோர் பலத்த காயத்துக்குள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வுடையிலிருந்த சுமார் 25 பேர் திடீரென இந்த ஹோட்டலுக்குள் நுழைந்து கடையை உடைத்துச் சேதப்படுத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற பின்னர் பொலிசார் கூட்டமாக நின்ற மக்களைக் கலைத்ததைத் தொடர்ந்து நகரில் பதட்டநிலை காணப்பட்டது. முன்னரும் இருதடவை இந்த ஹோட்டல் சேதப்படுத்தப்பட்டது.

நிலைமையை அறிந்து வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் சம்பவம் நடந்த இடத்திற்குச்சென்று பார்வையிட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக தாம் ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் நேரடியாகத்தொடர்புகொண்டுள்ளதாகவும் வவுனியா எஸ் பி, சந்திரசேகரம் டின், நாளை இராணுவ அணிவகுப்பொன்றைநடாத்த இணங்கியிருப்பதாகவும் வவுனியா எம். பி. எமது நிருபரிடம் நேற்றிரவு தெரிவித்தார்.

## தவறான செய்தி

(யாழ்ப்பாணம்)

நேற்றைய 'ஈழநாட்'டில் வெளியான செய்தியில், பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்திலிருந்து வேலணை நவீன சந்தைக்கு பணம் ஒதுக்கியுள்ளதாகவும், திரு. மு. சுப்பிரமணியம் வேலணைக் கிராம சபையின் விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்டதாகவும், வெளியான செய்தி தவறானது என்று காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் அறிவிக்கிறார்.

காரைநகர் கொலை வழக்கு:

# "வேறு ஒருவர் கழுத்தை நெரித்திருக்கவேண்டும்"

## டாக்டர் சாட்சியம்

[யாழ்ப்பாணம்]

"சவுந்தரம் தான் தன் கழுத்தை நெரிக்கவில்லை. வேறு ஒருவரால் கழுத்து நெரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பதே எனது அபிப்பிராயம்."

காரைநகர் கொலைவழக்கில் சாட்சியமளித்த டாக்டர் ரமணன் நீதிபதியின் கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனுப் எம். எம். அப்துல்காதர் முன்னிலையில் இரண்டாவது தினமாக விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் .76 மார்ச் 3ம் திகதி காரைநகரில் கணபதிப்பிள்ளை இராசரத்தினம் அவரது மனைவியான சவுந்தரத்தைக் கொலைசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரியின் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் சட்டத்தரணி கே. பி எஸ். வரதராஜா, சட்டத்தரணி எஸ். சுரேந்திரன் சட்டத்தரணி செல்வி வின்சன்ட் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானர். அரச தரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெயக்குமார் வழக்கை நடத்தினர்.

நேற்று இரண்டாவது தினமாக பிரேதபரிசோதனை நடத்திய டாக்டர் ரமணன் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்.

சட்டத்தரணி வி என். நவரத்தினம் குறுக்குவிசாரணை செய்தபோது, சவுந்தரத்தின் கழுத்தில் வேறுகாயம் எதுவும் இருக்கவில்லை என டாக்டர் ரமணன் கூறினர்.

சட்: இறப்பதற்கு முன் இழுபட்டுவந்ததற்கான காயம் உடம்பில் இல்லை? - இல்லை

சட்: தலைமயிர் வழமைபோல் இழுக்கப்பட்டிருந்தது? - ஆம்

சட்: மயிர் குழம்பியிருக்கவில்லை? இல்லை

சட்: பலாத்காரம் பவிேத்து கழுத்து நெரிக்கப்பட்டிருந்தால் இறந்தவரின் விரலில் சிறு காயங்கள் இருந்திருக்கும்? ஆம்

சட்: அப்படியான காயங்கள் எதுவும் காணப்படவில்லை? - இல்லை

சட்: தன்னைத்தானே ஒருவர் கழுத்தை இறுக்கி சாகமுடியும்? ஆம்

நீதிபதி: வேறு ஒருவரால் நெரித்துக்கொல்லப்பட்டாரா? தன்னைத்தானே நெரித்து இறந்தாரா என்பதை நீர் அவதானித்தவற்றைக்கொண்டுள்ள அபிப்பிராயம் கூறுகிறீர்? அவர் தானேசெய்யவில்லை வேறு ஒருவர் நெரித்திருக்கவேண்டும்.

சாட்சிகள் நேரத்திற்கு நீதிமன்றத்திற்கு வராததினுல் சாட்சிகளிடம் 'ஏன் தாமதித்து வந்தீர்கள்?' என நீதிபதி கேட்டார்.

'வருவதற்கு பஸ் ஒன்றும் இல்லை, அதனுல் தாமதமாகி விட்டது' என சாட்சி ஒருவர் தெரிவித்தார்.

நேரத்திற்கு நீதிமன்றத்திற்கு வரவேண்டுமென்றும். இல்லையேல் விசாரணை முடியும் வரை சிறைவைக்க வேண்டி ஏற்படும் என்றுகூறிய நீதிபதி நாளை காலை 8-30 மணிக்கு நீதிமன்றத்தில் இருக்கவேண்டும் எனக் கூறினர்.

நேற்று நீதிமன்றத்துக்கு வராத சாட்சியான ராசம்மாவிற்கு உடன் வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்றத்திற்கு வந்திருந்த 14 சாட்சிகளில் 9 பேரை நாளை வருமாறும், 5 பேரை வரத்தேவையில்லை வென்றும் அரச சட்டத்தரணி திரு. ஜி. ஜெயக்குமார் தெரிவித்தார்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும். (க)

## சாட்சிகள் வராததினுல் விசாரணை தாமதம்!

### ராசம்மாவுக்கு 'வாரண்ட்'

வழக்கமாக 9.15 மணிக்கு ஆரம்பமாகும் நீதிமன்றம் காலை 10-05 மணிக்கு ஆரம்பமானது.

14 சாட்சிகள் நீதிமன்றத்திற்கு வந்திருந்தனர். தாமதமாக நீதிமன்றத்திற்கு வந்த

## விடுதலைப்புலி தடை—

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுகின்றன. அதாவது தடைசெய்யப்படும் இயக்கத்தின் சின்னம் அல்லது சின்னங்கள், சீருடைகள் அணிவது தடைசெய்யப்படுகிறது. இந்த இயக்கத்தின் உறுப்பினர்களாக இருப்பது, ஆட்களைச் சேர்ப்பது, ஆதரித்து கூட்டங்கள் நடத்துவது, நிதிசேகரிப்பது, இதில் சம்பந்தப்பட்டவர்களை மறைத்துவைப்பது அல்லது இப்படியான செயலுக்கு உதவுவது, பொலிஸார் கண்ணில்படாமல் இவர்களை பாதுகாப்பது, பொலிசார் இவர்களைக் கைது செய்வதற்குத் தடையாக இருப்பது, இந்த இயக்கம் அல்லது இயக்கத்தினர் சம்பந்தமான துண்டுப்பிரசுரங்களை வெளியிடுவது அல்லது அதற்கு நேரடியாகவோ உதவுவது, விநியோகம் செய்வது ஆகியனவும் சட்டப்படி குற்றமாகும்.

### தண்டனை

இப்படியான குற்றச்செயலில் ஈடுபடுவோர் வாரண்ட் இல்லாமல் உடனடியாக ஆஜர் செய்யப்படுவர். குற்றவாளியாகக் காணப்படும் பட்சத்தில் ஏழு வருடக் கடுமையான சிறைத்தண்டனைக்குக் குறையாத தண்டனை வழங்கப்படுவதுடன் அசையும் அசையாத சொத்துக்களைப் பறிமுதல் செய்ய அல்லது தடுத்துவைக்கவும் புதிய சட்டமூலம் வகை செய்கிறது.

### மூன்று மாதம்வரை தடுத்து வைக்கலாம்

தடை செய்யப்படும் இயக்கங்களைச் சேர்ந்தவர்களையும், இதுசம்பந்தமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரையும் தடுத்துவைக்க நீதி அமைச்சுக்கு உரிமை உண்டு. மூன்றுமாதம்வரை ஒருவரை தடுத்துவைக்கவும். தேவைப்படும்பட்சத்தில் தவணையுடன் ஒருவருடம் வரை நீடித்து (தடுத்து) வைத்திருக்கவும் புதிய சட்டமூலம் வகைசெய்கிறது.

### அப்பீல் கிடையாது

வன்முறை, அல்லது சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டு குற்றவாளியாகக் காணப்படுவோர் தங்களுக்கு விதிக்கப்படும் தண்டனையை எதிர்த்து அப்பீல் செய்ய உரிமை கிடையாது. (ம)

புங்குடுதீவில்

## தற்காலிக வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு தபால் நிலையத்திற்கு நேற்றுமுன்தினம் வந்த ஒருவர் கடமையில் ஈடுபட்டிருந்த தபால் அதிபரையும் தபால் ஊழியர்களையும் தகாத வார்த்தைகளால் ஏசி அவமானப்படுத்தியதாகவும், அவர்களைத் தாக்க முற்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதையடுத்து அங்கு கடமையாற்றிய சிலஊழியர்கள் தமக்குப் பாதுகாப்புக்கோரிநேற்று தற்காலிக வேலைநிறுத்தம்செய்தனர்.

தபால் நிலையவேலைகள் நேற்று ஓரளவு ஸ்தம்பிதம் அடைந்ததாகக் கூறப்படுகின்றது. (இ)

## அ. எ. சங்க 17-வது ஆண்டு கூட்டம்

(கொழும்பு)

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 17வது ஆண்டுப் பொதுக்கூட்டம் ஜூன் 30-ம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

சங்க உத்தியோகத்தர்கள் பதவிகளுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல்செய்வதற்கான காலக்கெடு இன்று மாலை 6 மணியுடன் முடிவடைகின்றது.

பெரும்பாலும் பழைய உத்தியோகத்தர்களே இம்முறையும் போட்டியிடுவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பஸ் நிலையத்தில்

## ஒருகடையில் 42,600 ரூபா!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் புதிதாகக் கட்டப்பட்ட கடைகளில் ஒன்று 42 600 ரூபாவிற்கு கொடுக்கப்பட்டது.

பஸ் நிலையத்திலிருந்த 26 கடைகள் எரிந்து சாம்பலானதைத் தொடர்ந்து புதிதாக கடைகள் கட்டப்பட்டது. ஒரு கடை கூடுதலாகக் கட்டப்பட்டது.

26 கடைகளும் பழைய உரிமையாளருக்கே வழங்கப்பட்டு கூடுதலாக விருந்த 24 ம் இலக்கக் கடைக்கு ரெண்டர் கோரப்பட்டது.

இந்த ரெண்டர் மூலம் கிடைத்த 42, 600 ரூபாவும் நகர அபிவிருத்திக்கு செலவிடப்படும் என மாநகர சபை ஆணையாளர் திரு. சி. சிவஞானம் தெரிவித்தார்.

## நாகலிங்கசுவாமி சமாதியடைந்தார்

[யாழ்ப்பாணம்]

நீண்டகாலமாக நாவலர்வீதியில் அமைந்திருக்கும் அன்னசத்திரத்தில் சமயத்தொண்டு புரிந்த நாகலிங்க சுவாமிகள். நேற்று மாலை சமாதியடைந்துவிட்டார்.

சுவாமியார் கடைப்பிற்சுவாமியின் சிஷ்யருவார் இவர் 50 ஆண்டுகளுக்குமேலாக இன்னச் சுவாமிகளின் சமாதிக்கு பூசைகள் செய்துவந்தவராவர். அவர் இறக்கும்போது வயது 75.

சுவாமிகளின் நல்லடக்கம் இன்றுகாலை கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறவிருக்கிறது. ]கெ'

# 'இலங்கைதமிழரின்மொழிப் பற்று பாராட்டுக்குரியது"

## மொறிஷியஸ் இளைஞர் கருத்து

(மாவிட்டபுரம்)

"இலங்கைத் தமிழர்களிடையேயுள்ள மொழிப்பற்றும் பண்பாட்டு உணர்வும் மிகவும் பாராட்டுக்குரியதாகும்'

இவ்வாறு உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க மொறிஷியஸ் நாட்டுப் பிரதிநிதி திரு. சண்முகம் முனுசாமி, குரும்பசிட்டியில் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் பேசுகையில் கூறினர்.

உலகத்தமிழர் பண்பாட்டு இயக்க இலங்கைக்கிளை துணைச் செயலாளர் திரு எஸ். சண்முகலிங்கம் தலைமையில் நடந்த இக்கருத்தரங்கில் அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:-

"மொறிஷியஸ் நாட்டில் தமிழ் மக்கள் கடந்த 150 ஆண்டுகளாக பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவருகின்றனர். ஆனல் வரவர நிலைமை மாறி வருகிறது தமிழ் மக்கள் இங்கு கூட்டமாக வாழாது பரந்து வாழ்வதால் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளக் கூடியதாக கிரியோல் எனப்படும் மொழியையே பொது மொழியாகக் கொண்டு பேசி வருகிறோம் தமிழைப் பேசக்கூடிய சூழ்நிலை இல்லை 1ம் வகுப்பிலிருந்து 6ம் வகுப்பு வரையே தமிழ் படிக்கலாம் உயர்கல்வி ஆங்கிலத்தில்தான் படிக்கலாம், தமிழ்மொழி வளர்ச்சிக்கான வசதிகள், வாய்ப்புகள் இல்லை. இதனுல் இளைஞர்களாகச்சேர்ந்துமாலை பள்ளிகள் வைத்து தமிழ் மொழி அறிவை வளர்த்து வருகின்றோம்.

ஒரு இனம் வாழவேண்டுமானல் தனது நிலைபற்றிய சிந்தனை அதற்கு எழவேண்டும். ஆகவே எமது வரலாறுகளை நாம் முழுமையாக அறியவேண்டும் மொறிஷியஸ் நாட்டில் வாழும் தமிழர்கள் தமது நிலையை உணர்ந்துள்ளார்கள். அதன் பயனுகவே தமிழ்மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடுகளை பேணிக்காக்க ஆக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். இன்னும் 10, 15 வருடங்களில் நமது நாட்டில் தமிழ்மொழி கலை, கலாச்சாரம் பண்பாடு என்பன சிறந்து விளங்கும் என்பதில் ஐயமில்லை.

### தமிழ் வளர்ச்சிக்கு உதவி இல்லை

தமிழ்நாட்டை எமது இரண்டாவது தாய் நாடாக நாம் மதிக்கின்றோம். ஆனல் அவர்கள் எம்மீது அக்கறை காட்டுவதில்லை. தமிழ்மொழி வளர்ச்சிக்காக அவர்களது உதவி எதுவும் கிடைப்பதில்லை. ஆனல் இந்திய அரசாங்கத்தினுல் நமது நாட்டில் கட்டப்பட்டுள்ள மகாத்மாகாந்தி நினைவு மண்டபத்தில் ஹிந்தி நிகழ்ச்சிகள் மட்டுமே நடைபெறுகின்றன. தென்னுட்டிலிருந்து எதுவும் வருவதில்லை தமிழ்ப்படங்கள்கூட அருமையாகவே வருகின்றன. எம்மிடையேநீண்டகாலைபோன்ற வேறுபாடுகள் இல்லை. சகலரும் ஒரே மக்கள் என்ற நிலையில் வாழ்கிறோம்.

### 1 லட்சம் பேர் தமிழ் மக்கள்

நமது நாட்டிலே உள்ள 9 லட்சம் மக்களில் 1 லட்சம் பேரே தமிழர். வடஇந்தியர் 3 லட்சமும், முஸ்லீம்கள் 1 லட்சமும், சீனர் 25 ஆயிரமும் ஆபிரிக்கர் 1 1/2 லட்சமும், வெள்ளையர் 20 ஆயிரமும் வாழ்கின்றனர். ஆனல் சகலரும் ஒரே நிலையில் வாழ்கிறோம் ஏற்றத்தாழ்வுகள் இல்லை. அங்கு பாரம்பரியமாக எந்த இனமும் இருக்கவில்லை; எல்லோரும் வேறு இடங்களிலிருந்துதான் வந்தவர்கள். ஆகவே எவரும் எவரையும் போகச்சொல்லமுடியாது. சகலரும் சகோதரர்களாகவாழ்கிறோம்". (இ)

## பதவி வெற்றிடம்

### பொது முகாமையாளர் பதவி

தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனை கூட்டுறவுச் சங்கம்

கொடிகாமம்.

விண்ணப்பம் முடிவு திகதி: 26-5-78

தகமைகள்

[1] (அ) க. பொ. த (சாதாரணம்) 6 பாடங்களில் 2 முறைகளுக்கு மேற்படாமல் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் கூட்டுறவு ஊழியர் பயிற்சியில் சாதாரண சான்றிதழ் பெற்றவராய் இருத்தல் வேண்டும்.

(ஆ) ஆகக்குறைந்தது தெ. ப. பொ. உ. வி. சங்கத்தில் 3 வருட அனுபவம் இருக்க வேண்டும்.

[2] சம்பள விகிதம்:-

250 — 425

10X100 12.50X6

9316 தலைவர்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தி 68-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு மே மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu P. O. Box 49, Jaffna. Telegram "Eenaadu" Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.